ஆந்திரா, கர்நாடகம் அங்கெல்லாம் 35, 36 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலும் செய்ய திட்டம் உண்டா?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். தலைவரவர்களே, அவ்வப்போது அறிவிக்கப்படுகிற அரசு ஆணைக்கேற்ப தொழிலாளர் நலத்துறை நடந்து கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, 18 சதவீதம் கொடுத்தாக வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதா? அது என்றைக்கு போடப்பட்டது என்றும் இனி வரக்கூடிய காலி இடங்களை நிரப்பும் வரை அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே 1975லே இருந்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்போது அந்த சதவீதத்தைக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கேண்டிடேட்ஸை எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து அனுப்பும்போது அந்த முறையைக் கையாண்டு அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் முயற்சி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. ம. யூசுப் : தலைவரவர்களே, வினா எண். 148-க்கு ஒட்டிய துணைக் கேள்விகள் போடப்படும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் தனியார் வேலைகளை தாழ்த்தப்பட்டவர்களுக்கல்லாமல், தமிழர்களை நீக்கிவிட்டு முஸ்லீம்களுக்குக் கொடுப்பதாகவும், தமிழர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற வகையிலும் கேள்வியைக் கேட்டார்கள். அந்தக் கேள்வி அனுமதிக்கப்படுமானால் முஸ்லீம்கள் தமிழர்கள் அல்ல என்கின்ற கருத்தை உண்டாக்குமாகையால் தயவு செய்து அதைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூர் வட்டத்தில் பால் வழங்கு சங்கங்கள் மூலம் கடன்கள்.

*வினா எண். 149—திரு. கே. உச்சி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977-78-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டப் பேரவை தொகுதியில் எத்தனை அரிசன மக்களுக்கு பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பசுக்கள் வாங்க கடன் வழங்கப்பட்டது?

1979 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1977-78-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தில் உள்ள அரிசன மக்களுக்கு பால் விநியோக கூட்டுறவு சங்கங்களின் மூலம் பசுக்கள் வாங்க கடன் வழங்கப்படவில்லை.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, அந்தப் பகுதியில் மிக வும் ஏழ்மையான மக்கள், அதாவது அரிசன மக்கள் அன்றாட வாழ்க்கை வசதி கூட இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான அளவில் பசுக்களைக் கொடுக்க இனியாவது இந்த அரசு முன்வருமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அரசு இனிமேல் இந்த விஷயத்தை அனுதாபத்தோடு கவனிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, நீலகிரியில் வாழும் அரிசன மக்களுக்கு விரைவில் பசுக்கள் வாங்குவதற்கு கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால், அந்த மக்களுக்கு பணம் கொடுப்பதற்கு பதிலாக பசுக்களாக வாங்கித்தர அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற அந்த மக்களுக்கும் பசுக்கள் வாங்கித்தரவேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. தற்போது விலை உயர்ந்து விட்ட காரணத்தால் தான் அரசால் வாங்கித்தர இயலவில்லை. ஆகவே இனிமேல் அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விலை அதிகமாகிவிட்டது என்று கூறினார்கள். அப்படியானால் அந்தப் பகுதியிலே பால் மாடு வழங்குவதிலே பெரிய தவறுகள் நடந்திருப்பதாகவும் அது குறித்து கபால் என்ற இடத்தில் நடந்த விழாவின்போது அமைச்சரவர்களிடத்தில் அவர்களின் நேரடிக் கவனத்திற்கு அங்கிருக்கக்கூடிய பணியர்கள் என்ற வகுப்பைச் சேர்ந்த இருவர் விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா? அது உண்மையானால் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பால்மாடே வழங்கப்படாதபோது அது வாங்குவதில் தவறு எப்படி ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நான் கலந்துகொண்ட விழாவில் அப்படி யாரும் குறை சொல்ல வில்லை.